**செய்தி வெளியீடு எண்**: 905 நாள்: 23/10/2008

**நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை**

## செய்திக்குறிப்பு

**பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கு 2007–08 ஆம் ஆண்டுக்கான போனஸ் அறிவிப்பு**

**பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக தொழிற்சங்கங்களின் கோரிக்கை மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக நிதி நிலை ஆகியற்றை கருத்தில் கொண்டு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக 'சி மற்றும் டி' பிரிவைச் சார்ந்த அனைத்து பணியாளர்களுக்கும் 8.33% போனஸ் மற்றும் 11.670% கருணைத் தொகை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் அரசு ஆணை (நிலை) எண்.256, நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, நாள் 21.10.2008–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்குவதன் மூலம் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் 112 பணியாளர்கள் பயனடைவார்கள். இதனால் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு இவ்வாண்டு ரூ.6.72 இலட்சம் கூடுதல் செலவாகும்.**

**(கா.அலாவுதீன்)**
**முதன்மைச் செயலாளர்**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9